உ

சிவராமஜெயம்.

16 மதுரை

# சொக்கர் அலங்காரம்

இஃது,

சிறுமணவூர்,

## முனிசாமிமுதலியா

ரவர்களால் இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

19

உ

கடவுள் துணை.

## மதுரை

# சொக்கர் அலங்காரம்.

நேரிசைவெண்பா.

விண்டுவொடு செந்திருவும் வேதன் கலைமாதும்
அண்டரொடு ரவிமதியோ ரானவரும்-தொண்டர்முதல்
யார்க்கும் பொதுமதுரை அப்பனதுதிருவடியைப்
பார்க்கமன மேசமயம் பார்.

### புருஷன்சொல் தெம்மாங்கு.

மாதவங்கள்செய்தல்லவா மானிடராய்ப்பிரந்தமிப்போ
வேதம்போற்றுந்தென்மதுரை வாமயிலேபோய்வருவோம். (நன்)

அவர் தோடும்விடையும் துலங்குவடிவும்
பிறையின்முடியும் புனலிலொளியும்
கறியினுறியும் புலியினிடையும்
அறியுமயனும் பரவுமடியும்

அடியே- எத்தனைக்கோடி உத்தமர்தேடி
வருவார்நாடி புகழைப்பாடி
அவர்களடியின் பொடிகள்மேலே
அணுவினாலே வினைகள்போமே

அடியே சீக்கிரம்வாயே சேதியைகேளே
வாக்கியந்தாயே வழியைபாரே. (நன்ன)

தெம்மாங்கு.

புரசைநகரைவிட்டுப் புரப்பட்டோம்பெண்ணணங்கே
வரிசையாகத்தடத்தின்சேதி வரையைக்கேளுவிபரமாக. (நன்)

அலங்காரம்.

சூளைக்கடையின் காலைகெதியே
பாருமெதிரே பார்க்கின்சதியே
ஆனைகெவுனி அடுத்தவீதியே
சேனைப்பரவும் டேஷகிதுவே

அடியே—மானேஒத்தை வாடைபாரு
மதிராஸ்ரயில்வே ஸ்டேஷன்னேறு
தே[illegible]னலாஸ் பத்தரிபேறு
திருட்[illegible]ஜெயிலுங் கடந்தம்பாரு

அடியே—கரத்தைப்பிடியே கடுகேநடவே
பரத்தைபோலே பார்வையுனக்கே. (நன்று)

தெம்மாங்கு.

தெற்குகடல்காட்டும் தென்மாற்கடேஷனிது
நிற்கயிடங்கிட்டாமலே னெருக்குதடிஜெனப்பெருக்கம். (நன்)

அடியே—கூட்டம்நடுவே நெருங்கவேண்டாம்
குமிங்கிவேர்வை சொரியவேண்டாம்
காசுபணத்தை மதிக்கவேண்டாம்
காலையெடுத்து நடக்கவேண்டாம்
அடியே—பஸ்டுகிளாசி பாசைபாறு
பாவையென்னுடன் சொகுசாயேறு
இஷ்டமான பொருளைக்கேளு
யிதுவேபயணம் மதுரைநேறு
அடியே—மணியடித்தார் பிகில்கொடுத்தார்
மார்ச்சுபாசும் பிடித்துவிட்டார்
ரயிட்டுகொடியும் காட்டிவிட்டார்
லயகின்மேலே முடிக்கிவிட்டார்
அடியே—குப்புகுப்பென புகைகிளம்புது
கொடிகள்செடிகள் கூடவருது
மப்புமாசியும் ஒன்றாய்விளங்குது
மலைகளெல்லாங் கிடுகிடென்னுது
அடியே— ஓட்டம்பாறு ஓசைகேளு
வாட்டம்பாறு வறுகும்நேறு (நன்)

தெம்மாங்கு.

கண்டமடிசைதாபேட்டை காணுதுபார்பரங்கிமலை
விண்டவாயைமூடுமுன்னே வந்தமடிபல்லாவரம் (நன்)

அடியே—வண்டலூரும் கடந்தங்கூடு
வாஞ்சேரியும் மிதுவேபாறு
சிங்கப்பெருமாள் கோவில்பாரு
செங்கல்பட்டி லதிகசீறு
அடியே—சிவில்கோட்டு தெறியுதுபார்
திருடர்மொரடர் வெறியறிவற்கு
பொவுஷைபோக்கும் ஜெயிலுமதுவே
போலீஸ்டேஷன் ஊர்க்குபொதுவே
அடியே—வடகளத்தூர் பின்னல்போச்சி
வருகும்வேகம் பட்டாளமாச்சி
மதுரந்தகமும் நெறிங்கிபோச்சி
மானேஅச்சர வாக்கமாச்சி
அடியே—பெரும்பயரதோ பதிங்கிபோச்சி
பார்த்தால்ஒலகூர் ஒதிங்கிபோச்சி

திண்டிவனத்தில் மீட்டிங்காச்சி
தேனேமணியும் பனிரெண்டாச்சி
அடியே— பகடாயெடடி பசியைதீரடி
சொகுசாய்குந்தடி சோம்பல்விடடி (நன்னு)

தெம்மாங்கு.

தீராவினைதீர்க்கும் தென்மயிலம்தெரியுதுபார்
ஆறுமுன்பொன்னடியே ஆரணங்கேதோத்திரஞ்செய் (ந)
அடியே—இதுவேவிக்கிர வாண்டிபெண்ணே
விழுப்புரமது தாண்டிக்கண்ணே
பண்ணுரொட்டியும் கடந்தம்பெண்ணே
பாருய்நெல்லி குப்பம்பெண்ணே
அடியே—திருப்பாப்புலியூர் தேவஸ்தளமும்
தெரியுதுபார் கூடலூரும்
விருப்பமான ஆலம்பாக்கம்
விடிந்தஜாமம் பரங்கிப்பேட்டை
அடியே—தொல்லேவினைக ளெல்லாம்வாட்டும்
தில்லேகோபுரம் தெரிசனம்பார் (நன்னு)

தெம்மாங்கு.

கிள்ளேமொழியாரணங்கே கதிர்வடிவேல்துணையிருப்பார்
கொள்ளிடத்தில்வண்டிவருது குலிங்கினுலும்பயப்படாதே (நன்)
அடியே—பாளக்கரையுங் கடந்துபோட்டோம்
பாருய்சிரு காழியடந்தோம்
அநந்தநாத புரமுந்துட்ந்தோம்
அப்புரந்தானே மாயவரமும்
அடியே—குத்தாலமதோ குரிகிப்போச்சி
கூடவேநர சிங்கப்பேட்டை
வித்தகமருள் திருவிடமருதூற்
விவரமாய்பார் கும்பகோணம்
அடியே—கும்பலிங்கரை கருத்தில்வையடி
ஒன்பதுகோண மூரைப்பாரடி (நன்)
தெம்மாங்கு, சுந்தரப்பெருமாள்கோவில் சொல்லுபாவனுசமிது
அந்தமானஅய்யம்பேட்டை அடுத்தமடிதஞ்சாவூரை (நன்)
அடியே—அரசனுடைய அரண்மனேப்பார்
ஆனேசேனே பரிவாரம்பார்
காமாட்சியுட சன்னதிபார்
காவல்கோட்டை அகழியைப்பார்
அடியே—வருகும்போது விவரஞ்சொல்லுவேன்
வாடிபூத லூரும்காட்டுரேன்
திருவரம்பூர் தெரியபுல்லுவேன்
திருச்சினுப்பள்ளி யெரங்கச்சொல்லுவேன்

அடியே,—தானுவளர்த்த தாயுமானவர்
தாரிலெவர்க்கும் தந்தையுமானவர்
தேனுளணங்கே கிரியைப்பாரே
தெரிசித்திடுவோம் யேரிவாயே
அடியே,—திரும்புகாலை நன்ருய்ப்பார்ப்போம்
ஸ்ரீரங்கமு மிங்கேதோற்றும்
ஏழுமதிலும் கோபுரங்களும்
யிமையோராதிகள் தொழுதஸ்தளமாம்
அடியே—,விபூஷணுழ்வார் தொழுதாப்தா
வைகுண்டத்தலே வாழும்நாதா
புவியிலெங்கள் மீதில்வாதா
போற்றிசெய்வோம் அருளைதாதா
அடியே,— யென்றுதுதியே யேக்கம்நீக்கே
நின்றுதுதியே நிமிஷம்நினையே. (நன்ன)

தெம்மாங்கு.

தென்குளத்தூர்மணம்பாரை தெரியுதுபார்வையம்பாடி
அன்னமொழிமாதரசே அய்யலூரை அடுத்தமோடி. (நன்ன)
அடியே,—வடமருதையை கடந்துதேரடி
வந்தோம்அம்பாத் துரையுன்நேரடி
சோளவந்தான் கோவில்பாரடி
சமயநல்லூர் சிரியஊரடி
அடியே,—தென்மருதை கண்டமோடி
தேகமெங்கும் குளிர்ந்தமோடி
அம்மன்சன்னதி கோபுரம்பாரடி
அழகுமருதை வீதிபாரடி
அடியே,—திருமால்நாய்க்கன் மாலிநழகும்
தீர்ப்புகோர்ட்டு கச்சேரிகளும்
சருவதேசமுங் கடிதங்கொடுத்து
சஞ்சலமொழிக்கும் போஸ்டாபீசும்
அடியே,— செப்பினசேதி சிருய்ப்பாரே
தெப்பகுளமும் தெருவைபாரே. (நன்ன)

தெம்மாங்கு,

வீதிபலகடந்து வந்தோம்புதுமண்டபத்தில்
ஓதும்சரஸ்பதியாள் ஒங்கியிதோகுடியிருக்கிருள். (நன்ன)
அடியே,—புதுமண்டபத்தின் சொகுசைப்பாரு
புத்தகக்கடையின் அழகைப்பாரு
வெங்கலக்கடையின் விவரம்பாரு
வேணுமான பொருளைக்கேளு
அடியே—பொஸ்தாமரையில் தீர்த்தமாடு
பொசிக்கமிட்டாய் கடையைக்கூடு

வீரனுடைய அடக்கம்பாரு
வேதியர்கூட்டமும் சன்னதிபாரு
அடியே—பஞ்சவர்ண கிளிகள்பாரு
பாஷைபலதும் பேசுங்கேளு
அஞ்சாமருதை காவல்பாரு
அன்னமேயென்னுட மொழியைகேளு
அடியே—தாகம்நீக்கு ஜெனங்கள்போக்கு
துடந்துநோக்கு திரவுன்வாக்கு (நன்)

தெம்மாங்கு.

வாக்குதிரவுமென்று வண்மையுடன்சொன்னவரே
காக்கும்சதாசிவமென் கருத்தினிலேயிருக்கலியோ (நன்)

அடடா

யீசன்னமதுஉளத்திலில்லையோயேனோயிப்படிநடக்கத்தொல்லையா
காசையழித்துவரவும்சள்ளையா கருத்திலரியாமூடர்சொல்லையா
அடடா—நம்பித்துடந்தேன் யேனோநடந்தேன்
வழியுங்கடந்தேன் ஊரும்அடைந்தேன். (நன்னு)

தெம்மாங்கு.

மெத்தவருத்தமுற்று மேனியெல்லாம்வாடுகிறாய்
அத்தனதுதிருவருளை யாரறியக்கூடுமடி. (நன்னு)

அடியே

அகிலபுவனும்யெவையுமவனே அணுவும்மேறுமானதவனே
சகலஜீவஉயிருமவனே சாமியவனே னுமும்அவனே
அடியே, சாரகோரதீரக்கரையி லூருமனதைதேரப்பாரு
சேறும்பிரவிதூரும்நேறு பாலுனக்குகூரக்கேளு
அடியே— வேதநெறியே ஓதும்பெரியோர்
பாதம்பிடியே சூதையறியே (நன்னு)

தெம்மாங்கு.

மதுரைநகர்பார்க்க மனமகிழ்ந்துவந்ததன்றி
குதிரைவித்தவன் தன்னைனுடிகோறிவரங்கேழ்க்கலியே (நன்)

அடடா

யீசனம்பிடம்பேசப்போகுதா யீன்றகடவுள்மனதிலில்லையா
ஆசையிருந்துஅலைவதல்லால் ஐயோவரமுங்கொடுக்கப்போகுதா

ஐயா

யேனோயிப்படிஆவல்கொள்ளுரீர்என்னையிழுத்துஉள்ளேபோகுரீர்
கானலைப்பார்த்துநீரென்றலைவீர் கடவுளிருக்குமிடமுமறியீர்
ஐயா— ஆணும்பிரந்தும் புத்தியில்லையா
அடியாள்சொன்னதும் தெரியவில்லையா (நன்னு)

தெம்மாங்கு.

பித்தம்பிடித்தவனை பிள்ளைகறிதின்றவனை
மெத்தமெத்தபெறுமைசொல்லி மிரட்டுகிறாயென்கணவா (நன்)

அடடா [தான்
ஒருத்திகூடலில்பாதிகொடுத்தான் ஒருத்தியெடுத்து தலையில்வைத்
பிரமன்சிரசை திரிகிப்பிடித்தான் பிரம்பாலடியும்பட்டுபொருத்தா
ன் அடடா [திருத்தஞ்செய்தான்
மண்ணுமெடுத்தான் பெண்ணுங்கொடுத்தான்மறுத்துவச்சிபோல்
கண்ணன்கொடுத்தயெச்சிலைத்தின்றான் காட்டில்விரகையொடித்து
வித்தான் அடடா
யின்னமுஞ்சொல்லவா மானமில்லையா
போனதெல்லாம் யெடுத்துப்போடவா (நன்று)
தெம்மாங்கு, கறியையுரித்தவனை கையில்மழுவெடுத்தவனை
அறியனென்றுமிரட்டுகிறாய் அவனைச்சிவனென்றே துதித்தாய்(நன்)
அடடா [னைத்துலைத்தான்
கூட்டிக்கொடுத்தான் குலத்தைக்கெடுத்தான் குறக்குலத்திலேமக
மூத்தபிள்ளையைதெருவில்விட்டான்முரட்டுமாட்டையேரிதிரிந்தா
ன்] அடடா [செய்கிறான்
வல்லாளன்றனக்கு பிள்ளையாய்பிரந்தான் வருடந்தோறுங்கருமஞ்
யெல்லாவீட்டிலும் யிரந்துதின்றான் யிடமில்லாமல் சுடலைநின்றான்
அடடா— யென்றைசடலம் யிதற்கானடலம்
யெல்லாந்தெரியும் சொல்லவாகுறையும் (நன்று)
தெம்மாங்கு, காராம்புசுவானுன் கன்றுதனைகொன்றுவிட்டான்
தீராவிசனம்வைத்தான் தேங்கவைத்தான்உலகமெல்லாம் (நன்று)
அடடா [தான்
வஞ்சியர்தமக்கு வளையல்வித்தான் வனத்துபெண்களை கற்ப்பழித்
தாசிவீட்டிலேவாதஞ்செய்தான் தன்னுடையபிள்ளைக்கிவணங்கி
ன்றான் அடடா
பன்றிக்காகஅபயமென்றான் பார்த்தன்கையில்வில்லடிபட்டான்
மூத்தபிள்ளைக்கிகன்னிகழிய முதலில்லாமல்அலையவிட்டான்
அடடா-க்கட்டத்துணியு மல்லாமிடியன்
கறியினுறியை போர்த்தவெறியன் (நன்று)
தெம்மாங்கு, கெஞ்சாவெரியாலே கேட்டவரங்கொடுத்துவிட்டு
அஞ்சிபயந்தோடியல்லோ ஐவேலங்காய்தனிலொளித்தார் (நன்)
அடடா
பெண்ணையெதிர்த்து சபதங்கூறினான் பிள்ளைகள்போலஆட்டமாடி
குடிமாரனுடகுணத்தையரிந்தும் கூரைகூடபிரிக்கவைத்தான்
நரியைபரியாய்மாத்திவைத்தான் நமனைகூடவிழவுதைத்தான்
தெரிவில்மண்ணை மறுந்தாய்தொடுத்தான் தீராவழக்கைகோர்த்து
கெலித்தான் அடடா
யெல்லாப்பிழைப்பும்பிழைத்துபோட்டான்யின்னம்பிரவியெடுக்க
மாட்டான் னல்லவன்போலமௌனங்காட்டுவான் னம்பினுக்கால்
கெடுத்துப்போடுவான்

அடட காடுசெடியை வீடாவிடுவான்
மாட்டைகாட்டி மயக்கித்திரிவான் (நன்னு)
தெம்மாங்கு, பணமேதுகாசியேது பாப்பல்லவா ஆபரணம்
பிணமிருக்கும்சுடலையிலே குடியிருக்கும்ஆண்டிப்பயலே (நன்னு)
அடடா
கல்லாலடியும்வில்லாலடியும் காட்டுவேடன்செருப்பாலடியும்
யெல்லாம்பொருத்தகஞ்சாவெரியன் யேனோஅவனைநாய்பணிய
அடடா
குதுக்காரன்வாதுக்காரன் திரிபுரத்தையெறித்தபறையன்
மடிதைச்சுமந்துதிரிந்தவெறியன்மாளாவிடத்தைபாலாயுண்டவன்
அடடா-இதுவும்பிழைப்போ யென்னுகொழுப்போ
முழுதுமுரைக்க பொழுதுமிருக்கோ (நன்னு)

## புருஷன்சொல் தெம்மாங்கு.

உன்னைமலைத்தெல்லவா உளருகிறாய்பெண்ணணங்கே
தென்னவனைவீழ்த்தனுதன் திரமுறைக்கவயதுவேணும் (நன்னு)
அடியே
உலகமெவையும்அழியும்பொருளேஉடலும்நாளைசுடலைக்கரையே
நினைப்பதெல்லாம் நடப்பதில்லை நேத்திருந்தவர் இன்றைக்கில்லையே
அடியே [டம்
தொண்டர்க்காகயித்தனையாட்டம் தொடுத்துசோதனைசெய்தநாட்
ஆண்டர்முதலாம் ரிஷிகள்கூட்டம்யாரும்புகழும்மதுரைதேட்டம்
அடியே வுனக்கு [ச்சி
தெரியாதாலேஉறைத்தாய்சீச்சி தெரியப்படுத்தபொருத்தேன்பே
ரவியும்மேற்கே மறைந்துபோச்சி ரயிலுக்கேடயனுமாச்சி
அடியே-அரும்புவிழியே அமுர்மொழியே
திரும்பும்வழியே தீரஞ்செழியே. (நன்னு)
தெம்மாங்கு, சிறுமணவூரென்னும்பதி சிறுவன்முனிசாமிக்கவி
அருமையாகசொக்கர்பாதம் அலங்காரமாய் துதிமனமே. நன்னு
ஐயா,
நன்னூல்காண்டிகை நாலடியார் நளின்மொழியாமிலக்கணங்களும்
முன்னோர்குறளும்முதியகிகண்டும் மூடச்சிறியேன்தேடியறியேன்
ஐயா, [ன்
படித்துமறியேன் பகுத்துமறியேன் பாடும்பிரறைக்கேட்டுமறியே
வடிவத்தாராமொழியைப்போலேவரட்டுக்காக்கையிரையும்வாரே
ஐயா, [டா
அளித்தமகனும்மலத்தைவிட்டால்ஐயோதுடையை அறுப்பதுண்
களித்துயானு முறைத்தவாக்கைகருத்தில்பிழையாய்பொருத்தவே
ஐயா-பெரியோறடியே தினமுஞ்சிறியோன் [ண்டா
மரக்கவறியேன் துதிக்கப்பொருவேன். (நன்னு)

சொக்கர் அலங்காரம் முற்றிற்று.